**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 83 / 2018** |
| **Deposition of witness for** | : | **PW : 21** |
| **Name** | : | **திரு. பன்னீர்செல்வம்** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.02.2026**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் காவல்துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணியாற்றி பணிநிறைவு பெற்றுவிட்டேன். கடந்த 01.10.2016ம் தேதி நான் சாப்டுர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராகப் பணியாற்றி வந்தேன். அன்றைய தினம், நான் பணியில் இருந்த போது, காலை 10.00 மணிக்கு தலையாரி கருப்பையா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.177/2016 பிரிவு 174(3) crpc படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனு அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. **முதல் தகவல் அறிக்கை அதசாஆ.22 ஆகும்.** அசல் புகார் மனுவையும் முதல் தகவல் அறிக்கையும் இணைத்து பேரையூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை

சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் ஒரு நகலை ஆய்வாளர் விசாரணைக்கு ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :**

தலையாரி புகார் கொடுத்த பிறகு காவல் நிலையத்தில் எவ்வளவு நேரம் இருந்தார் என்று தற்போது சரியாக சொல்ல இயலாது. காவல் ஆய்வாளர் வரும்போது, தலையாரி காவல் நிலையத்தில் இருந்தார். அந்த தலையாரியை காவல் ஆய்வாளர் விசாரித்தார். எவ்வளவு நேரம் விசாரித்தார் என்று தற்போது ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை. சாப்டுர் காவல் நிலையத்தில் இருந்து பேரையூர் சுமார் 10 கிமீ தூரம் இருக்கும். சாப்டுர் காவல் நிலையத்தில் இருந்து பனையூர் சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். சுந்தரராஜ் பெருமாள் கோவில் வரைக்கும் ஜீப் போகும். சம்பவ இடமானது ஓடை ஆகும். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடன் அதன் நகலை புகார்தாரருக்கு கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். அச்சுப்படிவம் முதல் தகவல் அறிக்கையில் பாரா 14ல் புகார்தாரருக்கு நகல் கொடுத்ததாக அவரது கையொப்பம் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN

Digitally signed by NAGARAJAN
Date: 2026.02.10 14:28:09 +0530

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம், மதுரை